**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்**

**O.S.No.34/2022**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பு.பொன்னம்பலவாசன் |
| தந்தை பெயர் | : | புருஷோத்தமன் |
| வயது | : | 39 |
| தொழில் | : | விவயாபாரம் |
| முகவரி | : | மூர்த்திகுப்பம் |

1969-ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 19.09.2025 அன்று **செல்வி. பா.பெபேயா, பி.ஏ., எல்.எல்.பி.,** கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் 3 ம் தரப்பினர் ஆவேன். என்னை வாதி தரப்பு சாட்சி -2 ஆக விசாரணை செய்யவும் எனது முதல் விசாரணையை பதிவு செய்யவும் ஆஜராகியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் படித்துக்காண்பிக்கப்பட்டது என்றும் சத்தியமாய் சொல்கிறேன்.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.09.20 05:22:37 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.34/2022** தேதி: **19.09.2025**

வாதி தரப்பு சாட்சி -2 ( பு.பொன்னம்பலவாசன், த/பெ.புருஷோத்தமன்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

(1) வழக்கு தாக்கல் செய்த பெத்தபெருமாளை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் சுமார் 10 வருடங்களாக தெரியும். பெத்தபெருமாளைனின் அப்பா பெயர் என்ன என்றால் வேலாயுதம் ஆகும். வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் திருப்பாபுளியூர் வெள்ளிமோட்டான் தெருவில் உள்ளது.

(2) வழக்கு சொத்தினை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் தான் வழக்கு சொத்தினை பராமரித்து வருகிறேன். அதற்கு அவர்கள் செலவீனத்தை கொடுத்துவிடுவார்கள்.

(3) வழக்கு சொத்து தற்போது காலியாக தான் உள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பாக அதில் பழைய வீடு இருந்தது. வழக்கு சொத்தினை பொருத்து வாதியின் தந்தை தமிழக ஆளுநர் பெயருக்கு ஒரு பொருப்பு உறுதி பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(4) வழக்கு சொத்தினை பராமரித்து வருவதால் வாதிக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது . மறுவிசாரணை இல்லை.